# யாழ். கோட்டையின் முதலாவது வீழ்ச்சி

38

மாதோட்டத்திலிருந்து கால்நடையாக யாழ்ப்பாணத்திற்குச் சென்ற ஒல்லாந்துப் படை மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் 1658-ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் திகதி பூநகரியைச் சென்றடைந்தது. அப்போது அந்தப் படையிலிருந்த பெரும்பாலான வீரர்கள் தங்கள் கால்கள் வீங்கியும் நோய்வாய்ப்பட்டும் நடக்க முடியாமல் கஷ்டப்பட்டதாக அப் படைக்குத் தலைமை தாங்கி வந்த றைக்லொவ் (Ryckloff) அதே ஆண்டு மார்ச் மாதம் 17-ம் திகதி இந்தியாவில் தங்கியிருந்த ஒல்லாந்துக் கவர்னர் ஜெனரல் Joan Maetsuycker க்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். அவர்களது நல்ல காலமாக போர்த்துக்கேயர்கள் அவர்கள் ஆனையிறவு வழியாகவே வருவார்கள் என்றெண்ணி தமது படைகளை அங்கே நிறுத்தி வைத்திருந்தார்கள். அதனால் பூநகரியில் ஒல்லாந்தருக்கு எந்தவித ஆபத்தோ, எதிர்ப்போ இருக்கவில்லை. அதேநேரம் போர்த்துக்கேயப் பெண்ணொருத்தியை தனக்கு மணம் முடித்து வைக்க போர்த்துக்கேயர் மறுத்ததால் அவர்களுடன் விரோதம் கொண்டிருந்த வன்னிய சிற்றரசன் ஒருவனின் உதவி ஒல்லாந்தருக்குக் கிடைத்ததாக அறிய முடிகிறது. ஆனால் அந்த வன்னியனின் பெயர் என்ன என்பதை அவர்களது எந்தக் குறிப்புகளில் இருந்தும் அறிய முடியவில்லை.

ஒரு நாள் முழுவதும் பூநகரியில் தங்கி ஓய்வெடுத்த ஒல்லாந்தப் படை 1658-ம் ஆண்டு மார்ச் மாதம் 3-ம் திகதி அந்த வன்னிய அரசன் கொடுத்துதவிய மரக் கலங்களின் உதவியோடு பூநகரிக் கடலைக் கடந்து சாவகச்சேரியில் சென்று தரையிறங்கியது. அங்கே ஏற்கெனவே போர்த்துக்கேயரின் கட்டாய மதமாற்றம், சைவ ஆலயங்களை அழித்தமை முதலான நடவடிக்கைகளால் அவர்கள் மேல் கோபம் கொண்டிருந்த தென்மராட்சி வாசிகள் ஒல்லாந்தரை வரவேற்று அவர்களுக்கு வேண்டிய உணவுப் பண்டங்களையும் கொடுத்துதவினார்கள்.

அன்றிரவு நாவற்குளியில் ஓய்வெடுத்துக்கொண்ட ஒல்லாந்தர்கள் மறுநாள் காலை மார்ச் மாதம் 4-ம் திகதி நாவற்குளி உப்பாற்றைக் கடந்து சுண்டிக்குளி கோவில் வரை முன்னேறிச் சென்றனர். அங்கே கோவிலைச் சுற்றி காவலுக்கு நின்ற போர்த்துக்கேயப் படைக்கும் அவர்களுக்கும் இடையில் முதற் சண்டை நடந்தது. அதில் போர்த்துக்கேயர்கள் தோல்வியடைந்ததும், பின்வாங்கி ஓடிச் சென்று கோட்டைக்குள் புகுந்துகொண்டார்கள். அதுபோல் போர்த்துக்கேயருக்கு தீவிரமாக ஆதரவளித்த யாழ்ப்பாண நகரவாசிகளும் தங்களுக்கும் உயிராபத்து ஏற்படும் என்றஞ்சி கோட்டைக்குள் சென்று தஞ்சம் புகுந்துகொண்டார்கள். போர்த்துக்கேயரை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் எதிர்த்த ஏனைய யாழ்ப்பாண வாசிகள் நல்லூருக்கும், கோப்பாய்க்கும் இடம்பெயர்ந்து கொண்டனர்.

முற்றுகை மூன்றாவது மாதமாகத் தொடர உணவுப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இறைச்சிக்கு வெட்டுவதற்கு ஆடு, மாடுகளே இல்லாமல் போய்விட்டன. இதனால் கோட்டைக்குள்ளிருந்த நாய்களும், பூனைகளும், குதிரைகளும் இறைச்சிக்காக வெட்டப்படும் நிலை தோன்றியது. இவற்றைவிட ஒல்லாந்தரின் தாக்குதல்களால் காயப்பட்டவர்களுக்கு மருத்துவம் செய்ய மருந்துகள் இல்லாமல் போய்விட்டன.

அன்றைய சண்டையை சுண்டிக்குளியுடன் நிறுத்திய ஒல்லாந்தர்கள் அங்கே தமது முதலாவது படை முகாமை அமைத்துவிட்டு மறுநாள் காலை வழியெங்கும் குண்டுமாரி பொழிந்துகொண்டு கோட்டையை நோக்கி முன்னேறினார்கள்.




அங்கே ஏற்கெனவே போர்த்துக்கேயர்கள் கோட்டையின் வாசல்களை எல்லாம் இழுத்து மூடி அதற்குள் பிரவேசிப்பதற்கான வழிகளை எல்லாம் அடைத்துவிட்டு வாசலில் இருந்த கிணற்று நீரிலும் நஞ்சைக் கலந்துவிட்டார்கள்.

கோட்டையை அண்மித்த ஒல்லாந்துப் படை அதன் வெளிப்புற மைதானத்தில் நிலைகொண்டு கோட்டையை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தியது. அந்தக் கோட்டை வலிமை மிகுந்த கருங்கற்களால் கட்டப்பட்டிருந்ததால் அவ்வளவு சுலபத்தில் உடைத்து உட்புக முடியாதவாறு இருந்தது. இது இவ்வாறிருக்க, கோட்டை வாசலில் இருந்த கிணற்று நீரில் நஞ்சு கலக்கப்பட்டிருப்பது தெரியாமல் அதை அள்ளிக் குடித்த 30 ஒல்லாந்து வீரர்கள் அதே இடத்தில் இறந்துவிட்டனர்.

மறுநாள் மார்ச் மாதம் 5-ம் திகதி கோட்டை மைதானத்தில் இருந்த ஒல்லாந்துப் படைக்கு உதவியாக மன்னாரில் இருந்து கடல் மார்க்கமாக மேலதிகப் படை ஒன்று வந்து சேர்ந்தது.

அதன் பின் அவர்கள் இரண்டு பிரிவாகப் பிரிந்து ஒரு பகுதியினர் கோட்டை மீது தாக்குதல் நடத்த மறுபிரிவினர் யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்றத் தொடங்கினர்.

மார்ச் மாதம் 9-ம் திகதி யாழ்ப்பாண நகரத்தில் இருந்த யேசு சபைக் கல்லூரியும், கோவிலும் 18-ம் திகதி டொமினிக்கன் சபைக் கோவிலும், மடமும் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணக் கோட்டை 1658-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் திகதி முழுமையான முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டது. கோட்டைக்குள் இருப்பவர்களுக்கு எந்தவித உதவியும் கிடைக்காத வகையில் 24 மணி நேரமும் அது கண்காணிக்கப்பட்டது.

போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கப்பித்தன் மேஜர் அந்தோனியோ அமிறல் து மென்திஸ் மன்னார்ச் சண்டையில் இறந்துவிட்டதால் யாழ் கோட்டைக்குப் பொறுப்பாக இருந்த அந்தோனியோ மென்திஸ் அறன்ஹா (Antonio Mendis Aranha) என்பவன் கப்பித்தன் மேஜராகப் பதவியேற்று எப்படியும் தங்களுக்கு கோவாவிலிருந்து உதவி கிடைக்கும் என்று நம்பி கோட்டையைக் கைவிடாது ஒல்லாந்தருடன் தொடர்ந்து போர் செய்தான்.

யாழ்ப்பாணக் கோட்டைக்குத் தீவுப் பகுதியிலிருந்து உணவுப் பொருட்கள் வருவதை அவதானித்த ஒல்லாந்தர்கள் ஊர்காவற்துறை கடலிலிருந்த போர்த்துக்கேயரின் கடற் கோட்டையையும் அதை அண்மித்துள்ள தீவுப் பகுதிகளையும் கைப்பற்றாமல் யாழ் கோட்டைக்குள் இருப்பவர்களை சரணடைய வைக்க முடியாது என எண்ணினார்கள். எனவே ஒரு படையை காரைதீவுக்கு (காரைநகர்) அனுப்பி, அங்கிருந்துகொண்டு கடலில் இருந்த அந்தக் கோட்டை மீது தாக்குதல் நடத்தினார்கள். அந்தக் கோட்டைக்குள் இருந்த போர்த்துக்கேயரை சரணடையும்படி அறிவித்தார்கள்.

அவர்கள் அதற்கு மறுத்துவிட ஒல்லாந்தர்கள் அந்தக் கோட்டைக்கு எந்த உதவியும் செல்லவிடாது தடுத்து அதை நோக்கித் தொடர்ந்து தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தார்கள். 13-வது நாள் கோட்டைக்குள்ளிருந்த உணவும் குடிதண்ணீரும் தீர்ந்து போனது. 15-வது நாள் பசியால் வாடி தாகத்தால் நாவறண்டுபோன போர்த்துக்கேயப் படையினர் ஜெரோனிமோ து பாய்வ (Jeronimo de Paiva) என்னும் தளபதியின் தலைமையில் வெள்ளைக் கொடியை உயர்த்தியவாறு கோட்டையைவிட்டு வெளியே வந்து ஒல்லாந்தரிடம் சரணடைந்தனர்.

அந்தக் கடற்கோட்டை வீழ்ச்சியடைந்ததும் யாழ் கோட்டையிலிருந்த போர்த்துக்கேயப் படையினரின் நிலைமை இன்னும் மோசமாகியது. அவர்களுக்கு உதவுவதற்கு என கப்பல்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட உதவிப் படையும் கடலில் வைத்தே ஒல்லாந்தக் கடற்படைக் கப்பல்களால் சிதறடித்து அழிக்கப்பட்டுவிட்டது.

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பீரங்கிகளுக்கான குண்டுகள் முடிந்துவிட இடுகாட்டிலிருந்த நடுகற்களை இழுத்தெடுத்தும், ஆலயங்களில் இருந்த வெண்கல, பித்தளைப் பாத்திரங்களை நொருக்கிப் பொடி செய்தும் பீரங்கிக் குண்டுகளுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்பட்டது.

முற்றுகை மூன்றாவது மாதமாகத் தொடர உணவுப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இறைச்சிக்கு வெட்டுவதற்கு ஆடு, மாடுகளே இல்லாமல் போய்விட்டன. இதனால் கோட்டைக்குள்ளிருந்த நாய்களும், பூனைகளும், குதிரைகளும் இறைச்சிக்காக வெட்டப்படும் நிலை தோன்றியது. இவற்றைவிட ஒல்லாந்தரின் தாக்குதல்களால் காயப்பட்டவர்களுக்கு மருத்துவம் செய்ய மருந்துகள் இல்லாமல் போய்விட்டன. வாந்திபேதி அம்மை போன்ற நோய்களும் பரவ ஆரம்பித்தன. 1658-ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் திகதி வரை குண்டுக் காயங்களாலும் நோயாலும் யாழ் கோட்டைக்குள் 1600 பேர் இறந்துவிட்டனர். இதனால் இனியும் தாங்க முடியாது என்று கருதிய போர்த்துக்கேயர்கள் 21-ம் திகதி வெள்ளைக் கொடி உயர்த்தி சமாதானக் கோரிக்கையை விடுத்தனர்.

அவர்களது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஒல்லாந்தர்கள், அவர்களது தளபதியை முதலில் வெளியே வர அனுமதித்து அவனுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டு அவர்களது கொடியை தங்களது கொடியின் கீழ் பறக்கவிட்டு கோட்டைக்குள் உள்ளவர்கள் வெளியே வந்து சரணடைய அவகாசம் கொடுத்தார்கள். கோட்டைக்குள் இருந்து வெளியே வருபவர்கள் தங்களது உடைகளையும், உணவுப் பொருட்களையும் மட்டுமன்றி வேறொன்றையும் எடுத்துவரக் கூடாது என்று உத்தரவிடப்பட்டது. முதலில் படையினர் வெளியே வந்து சரணடைய ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வாறு வெளியே வந்து சரணடைந்த படையினரில் கோட்டை வாசலில் இருந்த கிணற்றில் நஞ்சு கலக்க ஏற்பாடு செய்த அதிகாரிகள் உட்பட 70 பேரை அந்தத் தண்ணீரைக் குடிக்க வைத்து இறக்கச் செய்த பின்னர் அந்தக் கிணற்றைத் தூர்த்தனர். அதையடுத்து கோட்டைக்குள் இருந்த மத குருமாரும், முதலிமாரும், பொதுமக்களும் வெளியே வர அனுமதிக்கப்பட்டனர்.

**- நக்கீரன்**